# பரிசுத்த பவுல் ஆலயம்

# அஹமதி தமிழ் திருச்சபை

## 46 வது ஆண்டு விழா சிறப்பு மலர்

### சபையின் வாக்குத்தத்தம்

# ... நான் வந்து உன் நடுவில் வாசம்பண்ணுவேன் ...

சகரியா 2:10

சிறப்பு
செய்தி மலர்
2022
நவம்பர்

மலர் -19
இதழ் -7



# சபை ஊழியரின் அன்பு மடல்



தேவாதி தேவனாம், கர்த்தாதி கர்த்தராம் மகிமைக்கும், மாட்சிமைக்கும் ஸ்தோத்திரத்திற்கும் பாத்திரராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் சபையோர் யாவரையும் அன்போடு வாழ்த்துகிறேன்.மோசே, யோசுவா இவர்களைக்கொண்டு இஸ்ரவேல் ஜனங்களை இக்கட்டுகள்,இன்னல்கள், தடைகள் மற்றும் போராட்டங்கள், அவிசுவாசம்,எல்லாவற்றிலும் மீளச்செய்து கானான் தேசத்தை சுதந்தரிக்கச்செய்த தேவாதி தேவன் தாமே இன்றும் நமது "அகமதி தமிழ் திருச்சபை"யை 46 வருடங்கள் சகலவித வழிநடத்துதலோடும், ஆசீர்வாதங்களோடும் நடத்தி வருகிறமைக்காக சபையார் அனைவரின் சார்பிலும் தேவாதி தேவனுக்கு நன்றி சொல்கிறேன்.

"கர்த்தராகிய நான் உங்கள் தேவன் என்று நீங்கள் அறிந்துகொள்ளும்படிக்கு, நான் நாற்பது வருஷம் உங்களை வனாந்திரத்தில் நடத்தினேன். உங்கள் மேலிருந்த வஸ்திரம் பழையதாய்ப் போகவுமில்லை, உங்கள் காலிருந்த பாதரட்சைகள் பழையதாய்ப் போகவுமில்லை" (உபா-29:5)

பிரியமான தேவஜனமே, சபையோரே இவ்விதமாய் ஆண்டவர் தாமே நமது சபையையும் 46 வருடங்கள் வளரச் செய்திருக்கிறார் வழி நடத்தி வந்திருக்கிறார். ஒருசிலராய் ஆரம்பிக்கப்பட்ட இந்த சபை இன்று வளர்ந்து அநேக ஊழியங்களுக்கும் நமக்கும் ஒரு ஆசீர்வாதமுள்ள சபையாய், சாட்சியுள்ள ஒரு சபையாய் குன்றின் மேலிட்ட விளக்கை போல வைத்து வழி நடத்தி வருகின்ற இராஜாதி இராஜாவிற்கு நன்றியுள்ள இருதயத்தோடு நாம் அனைவரும் கர்த்தருக்கு நன்றி சொல்லி துதிப்போம். நாம் அவரை துதிக்கின்ற, மகிமைப்படுத்துகின்ற,கூடுகின்ற எந்த இடத்திலும் வந்து நம்மை ஆசீர்வதிப்பவர்.

நமது அகமதி தமிழ் திருச்சபையை இந்த தேசத்தில் தேவ நாம மகிமைக்காகவும், அநேக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தும்படியாகவும், ஆரம்பித்த வளர்த்து நடத்தி தந்த தேவ பிள்ளைகள் சகோதர சகோதரிகள் யாவருக்கும் இந்த நாளில் சபையின் செயற்குழு ஊழிய பொறுப்பாளர்கள் சபையின் அங்கத்தினர்கள் ஒவ்வொருவரின் சார்பிலும் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் நன்றி சொல்கிறேன். கர்த்தர் தாமே அந்த சான்றோர்கள் ஒவ்வொருவரையும், அவர்களின் குடும்பம் தலைமுறைகளை ஆசீர்வதிக்கப்படும்படியாக ஜெபிப்போம். அநேகருடைய பிள்ளைகள் இந்த நாளிலும் நமது சபையில் அங்கமாக இருந்து தேவ நாமத்தை மகிமைப்படுத்துகிறார்கள். அதற்காக நான் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்.

"உமது கிரியை உமது ஊழியகாரருக்கும் உமது மகிமை அவர்கள் பிள்ளைகளுக்கும் விளங்குவதாக" (சங்கீ-90:16)

"கர்த்தர் தமது ஊழியக்காரரின் ஆத்துமாவை மீட்டுக்கொள்கிறார்" (சங்கீ-34:22)

மகிமையின் ராஜா தாமே ஒவ்வொரு நாளும் நமது சபையை அநேக விதங்கிளலே வளர்த்து ஆசீர்வதித்து வருகிறார். நாம் உலகப்பிரகாரமாக வளருவதைப்போல நமது சபைமூலமாகஅநேக ஆத்தும ஆதாயப்பணிகளை செய்ய கிருபை பாராட்டியிருக்கிறார். புதிய புதிய ஆத்துமாக்களினால் சபையை விருத்தியடைய செய்துவருகிறார். ஆகாய் தீர்க்கதரிசியின் வார்த்தைகள் நமது சபையிலும் ஊழியத்திலும் நிறைவேறி வருகிறதை நாம் ஒவ்வொருவரும் காண கிருபை பாராட்டியிருக்கிறார்.

முந்தின ஆலயத்தின் மகிமையைப் பார்க்கிலும் இந்த பிந்தின ஆலயத்தின் மகிமை பெரியதாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். இவ்விடத்திலே சமாதானத்தைக் கட்டளையிடுவேன் என்று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார் (ஆகாய் 2:9)

கடந்த வருடம் முழுவதும் எல்லோரையும், எல்லா நேரங்களிலும் எல்லா விதத்திலும், தாங்கினார், ஏந்தினார், தப்புவித்தார் இந்நாளில் ஆசீர்வாதித்தும் நடத்தி வருகிறார். ஆம் பிரியமானவர்களே அவர் வாக்குரைத்தவர், வாக்குமாறாதவர்.

"நீங்கள் என் கையில் இருக்கிறீர்கள்" (எரே 18:6) என்று வாக்குதத்தம் செய்த தேவன் நம் ஒவ்வொருவரையும் அவர் கையினாலே வனைந்து, உபயோகப்படுத்தி, ஆசீர்வதித்து வருகிறார். நாமும் ஒவ்வொருவரும் மண் என்பதை நினைவு கூர்ந்தவர்களாய் கர்த்தரின் கரத்தில் அடங்கியிருப்போம் அவர் தமது சித்தத்தின்படி நம்மை வனைந்து வழிநடத்துவார்.தாயின் கர்பத்தில் நம்மை கண்டவர், அப்பொழுதே பெயர் சொல்லி அழைத்தவர், கரம் பிடித்து நடத்துவார். அவரின் கையில் அடங்கியிருப்போம். கர்த்தர் கிருபை செய்வார்.

நாம் ஒவ்வொருவருக்கும், நமது சபைக்கும் கர்த்தர் செய்து வருகின்ற எண்ணி முடியாத அற்புதங்கள், அதிசயங்களுக்காகவும் இந்த 47வது ஆண்டுக்குள் பிரவேசிக்கின்ற நாம், நமது இருதயத்தின் ஆழத்திலிருந்து நன்றியுள்ள ஸ்தோத்திர பலிகளை செலுத்துவோம். அவர் துதிகளின் மத்தியில் வாசம் செய்கிறவர், தேவாதி, தேவனை ஸ்தோரிப்போம், அவரை சோக்கின முகங்கள் ஒருநாளும் வெட்கப்பட்டு போவதில்லை, மாறாக அவர் நம்மை பிரகாசிப்பிக்கப் பண்ணுகிற தேவனாக இருக்கின்றார்.
"இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்ளுவேன்" (சங் 116:13).
இப்படியாய் நாம் அவரை தொழுதுகொண்டு, துதித்து, கெம்பீரித்து பாடி ஸ்தோத்திர பலிகளை ஏறெடுக்கும்போது, அவர் வந்து நம் மத்தியில் வாசம் பண்ணுவார்.

## "நான் வந்து உன் நடுவில் வாசம் பண்ணுவேன்" (சகரியா 2:10).

தாவீது சொல்லுவதுபோல " உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறவித்து, சபைநடுவில் உம்மை துதிப்பேன்" நாமும் அவரை துதிக்கின்ற பொழுது நம்மிலே இடைபடுவார், உலாவிடுவார், நம்மத்தியில் வந்து நம்மை காண்கிற தேவனாக, ஆற்றி தேற்றுகிறவராக, அரவனைத்து ஆசீர்வதிக்கிறவராகவே இருப்பார். நாம் எங்கோ இருப்பது போல இருக்கும். இருள் நம்மை சூழ்ந்து கொண்டு, காரிருளின் மத்தியில் இருப்பதுபோல இருக்கும். ஆனாலும் அவர் நம்முடைய வாழ்வில் ஒளியாய் வந்து நம்மை வெளிச்சத்தின் பிள்ளைகளாக்குவார், நடத்துவார்.

வெளிப்படுத்தின விசேஷம் ஏழாம் அதிகாரத்தில் வாசிப்பது போல அந்த தூதர்களைப் போல நாமும் முகங்குப்புற விழுந்து, சிங்காசனத்தின் முன்பு அவரை தொழுது கொள்ளும்போது சிங்காசனத்தில் வீற்றிருக்கிவர் நமக்குள்ளே வாசமாயிருப்பார், நாம் பசியடைவதுமில்லை, தாகமடைவதில்லை, வெயிலும், உஷ்ணமாவது நம்மை பாதிப்பதுமில்லை. அவரே நம்மை மேய்த்து ஜீவதண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நம்மை நடத்துவார். கண்ணீர் யாவையும் துடைப்பார். நமது கண்ணீரை ஆனந்த களிப்பாக மாற்றுவார். ஆம் பிரியமானவர்களே நாம் கெம்பீரித்து பாடவேண்டும், நன்றியறிதலுள்ள பிள்ளைகளாய், எந்நாளும் அவருடைய கரத்தில் அடங்கியிருப்போம். ஆசீகளை பெறுவோம்.

நமது சபையின் சிறுவர் வேதாகமப் பள்ளி 2002–ஆம் ஆண்டு துவங்கி இன்று 2022–ஆம் ஆண்டு 20 வருடங்கள் நமது சிறுபிள்ளைகளை சத்தியத்தில் நடத்த கர்த்தர் கிருபை செய்துள்ளார். "கர்த்தருடைய கிருபையோ அவருக்கு பயந்தவர்கள் மேலும், அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய, பிள்ளைகள் மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது" (சங் 109:9).

பிரியமான பெற்றோர்களே நாமும் மத் 19:14ல் சொல்லியபடி சிறுபிள்ளைகளை கர்த்தரிடத்தில் செல்வதற்கு இடம் கொடுங்கள், வழிநடத்துகள். "என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை".

கடந்த 20 வருடங்கள் இந்த ஊழியத்தை எடுத்து நடத்தி வந்த அன்பான ஊழியப் பொறுப்பாளர்கள், வேதாகமப்பள்ளி ஆசிரியர்கள், உடன் ஊழியர்கள் மற்றும் இந்நாளில் பொறுப்பெடுத்து நடத்திவருகின்ற தேவபிள்ளைகள் யாவரையும் உன்னத்தின் தேவன்தாமே உசிதமான நன்மைகளினால் போஷித்து, ஆசீர்வதித்து நடத்துவாராக என்று சபையோராக வாழ்த்துகின்றோம்.

தேவ வசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து அவர்களுடைய விசுவாசத்தைப் பின் பற்றுங்கள்" (எபிரே 13:7).

வருகின்ற வருடங்களில் இன்னும் அநேக பிள்ளைகள் இந்த ஊழியத்தின் மூலம் கர்த்தருக்குள் வரவும், வளரவும், சபைக்கும், சமுதாயத்திற்கும் சாட்சியாய் வாழ நாம் அனைவரும் ஒருமனமாய் ஜெபித்துக் கொள்வோம்.

நம்பிள்ளைகளை கருத்தாய் போதித்து நம் வீட்டிலும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும் உலக ஞானத்திலும் தேவ தூதர்கள் பாதுகாக்க ஜெபிப்போம்.

ஆண்டுவிழா வாழ்த்துகளுடன்
சபை முதன்மை ஊழியர்,
சகோ.ஜெயசேகர்.

## தட்டுகிறேன் திறவாயோ!

தாயினை போல, தந்தைக்கு மேலாய் தாங்கும் தரணியிலே
உளைபோல் யான் கண்டதில்லை அழகிய அஹமதி தமிழ் திருச்சபையே!!
வானுயர வளர்ந்தும் –சிரம்
தரைமட்டும் தாழ்த்தி –உள்ளத்தை மட்டும்
கொடு என கேட்டவரே உன்னை வணங்குகிறேன்
உரைப்பாயோ? உன் ஜனனம்?
அன்று புன்னகை பூத்தேன்
புத்துயிர் பெற்றேன்
எழுப்பத்தி ஏழாம் ஆண்டு
ஏங்கும் சில நெஞ்சங்களுடன்–
புத்துயிர் பெற்றேன்! புன்னகை செய்தேன் . . .
வளர்க்க வழியிருந்தும்
வணங்க வழியில்லை – அன்று
இந்நிலம் (அஹமதி) கண்டெடுத்தீர்
இன்முகம் அடைந்தேன்
கன்னி மரிமைந்தன்
கன்மலை நாயகன் – கரம்பற்றி
காலம் இரண்டும் அடைந்தேன் ஆண்டு
ஐயொன்பதும் கடந்து – இன்று (என் கண்மணியே)
மூவொரு தேவனின் வாக்குபடி முன்னோர்களின் ஆசிப்படி
முறைப்படி வேத விதிப்படி
தனக்கென தனி இடம்பிடி என வாழ்கின்ற
தமிழ் திருசபையே . . .
உன் பயணத்தின் படிகள்தான் என்ன?

தத்தி தவழ்ந்த என்னை
தாவும் மழலை யாக்கினன்–எனக்கு
புத்தி புகட்டி என்னில் புதுமைகள் செய்து
புதுபெலன் ஈந்து புன்னியரின் காயங்களால் மீட்டுகொண்ட
புத்திரராம் இவர்களின் புகலிடம் ஆக்கினன் . . .

விளங்கியது சற்றே! ! அறிவிற்கெட்டவில்லை அதிகம் ! ! !
விளங்கி கொள்ள விளக்கம் வேண்டும்
தேவ அன்பில் வியந்தோர்
தேவ அறிவில் தேர்ந்தோர்
ஈகை திரானி மிகைந்தோர்
ஊழிய பாதையில் முதிர்ந்தோர் – அதற்கென
கொடுக்கும் உள்ளத்தில் உயர்ந்தோர்
உலக வயதில் பெரியோர்
உன்மையாய் ஊழியம் செய்வோர் – என
இறைவன் அருளால்
சொல்லி முடியா நன்மைகள் பெற்று
சொந்த நாட்டை போல வாழ்கின்றேன்

வனாந்திரம் தன்னில்– தன்
வழியை மறந்தேன்
வறண்ட நிலத்தில் வருணனை கலைத்தோன்
ஆழ்கடலில் துடுப்பை இழந்தேன்– தன்
அனுதின பயணத்தில் அமைதி தொலைத்தேன்
வறுமையில் பசியை அறிந்தோன் –பிறர்
வஞ்சனையில் வசமாய் அகப்பட்டேன்– என

பகட்டாய் திரியும் பாவ உலகில்
பரிகாரியாம் பரமனின் பிள்ளைகளின்
புகலிடம் ஆக்கினன் எனை! ! !

அந்நிய தேசமாம் அரபு
அதில் பண்புமாறாத மரபு
சொந்த மொழியின் உறவு – நீயே என்றும்
சொர்க்க நாதனின் நிலவு

வந்தோரை வாழவைத்து வழியானாய் – தன்னை
இகழ்வோரை இன்னல்துடைத்து இன்புற்றாய்
எம்பெருமான் இயேசுவின் அருளால் வேறென்ன
செய்தாய் . . . ?

சொந்த மொழியில் ஆராதனை
சொந்த பந்தங்களுடன் . . .
சபை , கூடுகைகளின் ஒழுங்குகள்
சகோதர சகோதரிகளுடன் . . .
ஞாயிறு விடுமுறை வேதாகம பள்ளி
ஞானம் விளங்கும் நம் குழந்தைகளுடன் . . .

காடுமலை கடந்து, காலநிலை பாராது
கடவுளின் தொண்டு செய்யும் மிஷனரிகளைபோல்
கேட்பாரற்று இருக்கும் கேம்புகளின் அறைகளில்
புத்துயிர் பெறும் புதன் தோறும் . . .
எதிர்கால எழுச்சி வீரர்களின்
எல்லா வாலிப ஐக்கியத்திலும் . . .
ஒடி சாதனைபடைக்கும் பெண்களின் மத்தியில்
முழங்கால்களின் சக்தியை சாதனையாய் மாற்றும்
"திங்கள்"
மங்காத மணிவிளக்காம் எம் மகளிரின்
மாதாந்திர ஜெப கூடுகை . . .
சங்கீத கீத வாத்தியங்களால் சர்வ வல்லவரை போற்றி
துதிக்கும்
சர்வ சேனையாம் எம் பாடல் குழு . . .
நவமான ஊழியம் அதில்
நலமான ஊழியர் என்னிடம்
வேண்டுவோர் குறைதீர்ப்பேன்
வேந்தன் இயேசுவின் துணைகொண்டு . . .
வாய்மொழி கேட்டேன் வசப்பட்டேன்
மொழிவழி பார்த்தேன் முகமலர்ந்தேன்
அகமொழி கண்டு அகமகிழ்ந்தேன்
மனதார வாழத்துகிறேன் பல்லாண்டு வாழ வாழியவென

அனைத்தும் அறிந்தேன் அன்னையே உன் அடி சரணம்
ஆவலுடன் பகிர்ந்தாய் ஆச்சர்யம் அடைந்தேன்
இன்னலை தீர்த்தாய் இனியவளே உன் அடி சரணம்
ஈகை புரிந்தாய் ஈசனடி சரணம்
உயிரே உன்னிடம் உள்ளத்தை தந்தேன்
ஊமையாய் நானும் உன் அடி சரணம்
ஐயமின்றி உட்புக ஆவலுடன் இருக்கின்றேன்
ஒரு வார்த்தை சொல்லும் ஒப்பில்லா தீர் உயிரே !
ஓடோடி வந்திடுவேன் நானும் உன் அடி சரணம்
ஔடதமாய் உன்னை நானும் உட்கொள்ள ஆசையடி

மணவாளன் இயேசுவுக்காய் – கையில்
மங்காத தீபம் ஏந்தி
மணவாட்டியாய் ஆயத்தமாகும் உன்னுடன்
மன மகிழ்ந்து வர ஏங்குகிறேன் – நானும்
தட்டுகிறேன் திறவாயோ ? ! ! ! ?

அன்புடன் வாழ்த்தும்,
சகோதரி.நகோமி ஜான்சன்

## என் நேசமே

என் மேல் பறந்த கொடி நேசமே
உன்மை நாடி வருகின்றேன்
காலை கதிரவனை கண்டு நான் கேட்கின்றேன்
என் மணவாளனை கண்டாயோ என்று

வருகிறேன் என்று சொன்னவரிடம்
என் ஏக்கத்தை சொல்லி விடு என்றேன்
இடியும் மின்னலும் எக்காள சத்தமும்
மன்னவரின் வருகையை அறிவிக்கும் நேரத்தில்
மறவாது என்னையும் மார்போடு சேர்த்துக் கொள்ளும்
அனுதினமும் துதித்திட உம் அருகில் அமர்ந்திட
ஆசையாய் கேட்கிறேன் ஆம் என்று சொல்லிவிடும்
ஆண்டு விழா ஆராதிக்கிறோம் அஹமதியில்
எங்கள் அகம் முழுவதும் உம் துதியே . . .

வாழ்த்தும் வணக்கத்துடன்,
சகோதரி. வனிதா

## "தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கு"

"மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கை தெரிந்து கொண்டாள்" லூக்கா 10:42 கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் சபையின் 46-வது ஆண்டு விழா வாழ்த்துதல்களை தெரிவித்து கொள்கிறேன்.

உலகத்தில் ஏராளம் நல்ல பங்குகள் உண்டு. ஆனால் அவைகள் ஒருநாளில் எடுபட்டு போ-கும். நிலமோ, பணமோ, வீடோ, உற்றாரோ, உறவினர்களோ, இன ஜன பந்துக்களோ எல்லாமே ஒரு நாளில் எடுபட்டு போக கூடியவைகள்தான். அதாவது கைவிட்டு போக கூடியவை தான். ஏராளம் ஆஸ்தியை கூட ஒரு வியாதி அழித்துவிடும். பெரும் பாடுள்ள ஸ்திரீ தான் ஆஸ்திகளையெல்லாம் விற்று வைத்தியருக்கு கொடுத்தாள் என்று மாற்கு 5:26-ல் பார்க்கிறோம். ஒரு கெட்ட சுபாவம் அல்லது சொற்ப மதியீனம் ஆஸ்தியையெல்லாம் அழிக்ககூடும். இளையகுமாரன் தன் ஆஸ்தியையெல்லாம் தூரதேசத்துக்கு சென்று உதாசின-மாய் செலவிட்டு தீர்த்தான். லூக்கா 15:12,13. குடிப்பழக்கம் உள்ள அநேகர் தங்கள் ஆஸ்திகளையெல்லாம் அழித்த சம்பவங்கள் உண்டு. வட்டிக்கு கடன் வாங்குவது கூட சில சமயங்களில் ஆஸ்திகளையெல்லாம் அழித்துவிடும். திடீர் விபத்து கூட மனிதனை தரித்திரனாக்கி விடக்கூடும் எனவே நாம் உலகத்தில் காண்கின்ற நல்ல பங்குகள் இயேசு கூறின நல்ல பங்கு அல்ல. இயேசு மரியாளை பற்றி கொடுத்த சாட்சியின் பங்கு என்னவெனில் ஆவிக்குரிய ஆசீர்வாதம் ஆகும். மரியாள் அந்த நல்ல பங்கை எப்படி பெற்றுக் கொண்டாள்? நாம் அதை எப்படி பெற்று கொள்ள முடியும் என்பதை சுருக்கமாக தியானிப்போம்.

### 1.இயேசுவின் வார்த்தைகளை கேட்பதன் மூலம்:

மரியாள் இயேசுவின் பாதத்தண்டை உட்கார்ந்து அவரது வார்த்தைகளை கவனமாய் கேட்டாள். நம் வாழ்க்கையில் இயேசுவின் பாதத்தில் உட்காரும் நேரத்தை சாத்தான் திருடிவிடக்கூடும். அதாவது காலை முதல் இரவு வரை நாம் எதையோ செய்துகொண்டிருக்கிறோம். அதனால் களைத்து போய்விடுகிறோம். வேளைப்பளு நம்மை இயேசுவிடம் உட்கார அனுமதிப்பதில்லை. மார்த்தாளுக்கும் இதே கதைதான். பலவிதமான வேலைபளு. அவள் மனதிலும் சரீரத்திலும் எப்போதுமே ஓய்வில்லாமல் பரபரப்பாகவே இருந்தாள். இயேசுவிடம் போய் தன் சகோதியை குறித்து புகார் பண்ணுகிறாள். அவளுக்கு செவிசாய்க்க அவள் நேரம் செலவிடவில்லை.

நாமும் கூட இயேசு நம்மோடு பேசுகிற நேரத்தை அல்லத்தட்டிவிட்டு மற்ற வேலைகளை செய்வதால் நல்ல பங்கை இழந்து விடகூடும்.களைப்பும், தோல்வி மனப்பான்மையும் தான் மிச்சம். எனவே நாம் வேதம் வாசிப்பதிலும், தியானிப்பதிலும், அவரின் வார்த்தைகளை கடைபிடித்து நடப்பதிலும் மிக சரியாக இருக்கவேண்டும். அப்போதுதான் கிறிஸ்தவ ஜீவியத்திற்கு நல்ல பலன் உண்டாகும்.

## 2.தெரிந்து கொள்ளுதல்:

ஒவ்வொரு தேவபிள்ளைகளுடைய வாழ்க்கையில் ஆவிக்குரிய தன்மையை வடிவமைப்பது அவர்களது தெரிந்து கொள்ளுதலை பொறுத்துதான் அமையும். பலர் உலக நண்பர்களுடைய நடத்துதலால் உலகத்தை தெரிந்து கொள்கிறார்கள். ஆனால், ஆவிக்குரிய நல் ஆலோசனை-களை பெறுபவர்கள் நீர்கால்கள் ஓரமாய் நடப்பட்ட மரங்களைபோல் வளர்ந்து கனிகொடுப்பார்கள். "துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் , பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு தன் காலத்தில் தன் கனியை தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தை போலிருப்பான். அவன் செய்வதெல்லாம் வாய்க்கும். சங் 1:1-3.

இஸ்ரவேல் ஜனங்கள் கூட கர்த்தரை விட்டு பலமுறை அந்நிய தெய்வங்களை தெரிந்து கொண்டபடியால் தண்டிக்கப்பட்டார்கள்.
மரியாளோ இயேசுகிறிஸ்துவினுடைய பாதத்தருகே உடகார்ந்து அவருடைய வசனத்தை கேட்டு கொண்டிருப்பதையே தெரிந்து கொண்டாள். இதனால் தான் இயேசு மரியாளை குறித்து சாட்சி கொடுத்தார்.

## அன்புகூர்ந்தாள்:

மரியாள் இயேசுவின் மேல் வைத்த அன்புதான் அவளை இயேசுவின் பாதத்தண்டை அமரபண்ணிற்று. அவள் இயேசுமேல் வைத்திருந்த மரியாதை, மதிப்பு, கனம் அங்கே வெளிப்படுகிறது. அவரது வார்த்தையின் மேல் அவளுக்கு அவ்வளவு நம்பிக்கை இருந்தது. அவரது வார்த்தையிலும், அவரிலும் அன்பு கூர்ந்ததால் தான் பற்பல வேலைகளை செய்வதில் கவனத்தை சிதறாமல், இயேசுவுக்கு ஏதாவது புசிக்க கொடுக்க வேண்டும் என்ற சிந்தையை விட்டுவிட்டு அவரிடத்தில் அமர்ந்து தன் ஆத்துமாவை நிரப்புகிறாள். நாமும் அவரில் அன்பு கூற கடனாளிகளாயிருக்கிறோம். அன்பில்லாதவன் ஒன்றுமில்லை 1கொரி 13-ம் அதிகாரம் அன்பைப் பற்றி விளக்குகிறது.

## ஆவிக்குரியவள்:

வெளிதோற்றத்தில் எல்லாரும் மனிதன் அல்லது மனுஷியாவே இருப்பார்கள். ஆனால் ஆவிக்குரியவர்கள் வேறு, ஆவிக்குரிய அல்லாதவர்கள் வேறு, ஒரே வீட்டிலுள்ள இரண்டு சகே-ாதரிகளில் ஆவிக்குரியவள் ஒருத்தி, மற்றவள் உலக காரியஙங்களில் அதிக நாட்டமுள்ளவள். ஆவிக்குரியவர்களுடைய இருதயம் புதுப்புது சத்தியத்தை கேட்பதில் மிகவும் நாட்டமுடையதாயிருக்கும். அவர்கள் அனுதினமும் ஆவியில் வளருவார்கள், கனிகொடுப்பார்கள். (கலா 5:22.23).

## நித்திய ஜீவனை சுதந்தரித்தல்:

இயேசு சொன்ன நல்ல பங்கு உலகத்தால், உலகத்தாரால் மாற்றப்படமுடியாத ஒரு மேன்மையான பங்கு அதுதான் நித்திய ஜீவன். இந்த நித்திய ஜீவனை இயேசுவேயன்றி வேறு ஒருவரிடமிருந்தும் நாம் பெற்றுக் கொள்ள முடியாது இயேசுவின் பாதத்தில் அமர்வதே அதை பொற்றுக் கொள்ளும் ஒரே வழி மரியாள் இயேசுவின் பாதத்தில் அமர்ந்ததில் அவரது பிரதிஷ்டை, செவிகொடுக்கும் தன்மை, கிரகிக்கும் தன்மை யாவும் வெளிப்படுகிறது. "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டு போகாமல் நித்திய ஜீவனை அடை-டயும் படிக்கு அவரை தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்" யோ 3:16.

நாமும் குறை கூறுகின்கிறவர்களாக இல்லாமல், பிறரைபற்றி அவதூறு பேசுகிறவர்களாக இராதபடிக்கு, நான் மட்டுமே பரிசுத்தவான் என்று அலட்டித படிக்கு தேவ சமூகத்தில் உட்காரும்படியாய் நேரத்தை ஒதுக்கி, ஒவ்வொரு நாளும் அவரிடத்தில் கற்றுக்கொள்வோமாக, நம்மை விட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்துகொள்வோமாக, அல்லேலூயா தேவன்தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக.

ஆண்டு விழா வாழ்த்துகளுடன்,

**சகோதரி. மெர்ஷிலின் தயா ஏசுரெத்தினம்**

46–வது வயதாகும் எங்கள் அகமதி தமிழ்
திருச்சபையே நீர்
எங்களுக்கு செய்து வரும் உதவிகள் ஏராளம்
அது சொல்லி முடியாது

46– வருடங்களாய் கரம் பிடித்து.....
46– வருடங்களாய் வழி நடத்தி.....
46– வருடங்களாய் காத்து வந்து.....
46– வருடங்களாய் ஏந்தி சென்று....
46– வருடங்களாய் தாங்கி....
46– வருடங்களாய் தப்புவித்து....
46– வருடங்களாய் அடைக்கலமாய்....
46– வருடங்களாய் கேடகமாய்.....
46– வருடங்களாய் கண்மலையாய்.....
46– வருடங்களாய் பெலனுமாய்.....
46– வருடங்களாய் துணையாய்....
46– வருடங்களாய் என்னோடிருந்தவருமான

தேவாதி தேவனும் கர்த்தாதி கர்த்தரும்
இயேசு கிறிஸ்துவை போற்றி துதித்து
வணங்குகிறேன்.



கர்த்தருக்கு அன்புள்ள,
**சகோ. சுகுமார்**

## உம் ஆண்டுகள் முடிவதில்லை

அஹமதி தமிழ் ஆலயத்தின் அகவை 46 கடந்து
அகவை 47–ல் பிவேசிக்கும் விசுவாசிகளே
மறக்காதீர்கள்!!!

உங்க எதிர்பார்புகள் எல்லாம்
பொய்யாகிறதே என்று
நம்பிக்கை இழக்காதீர்கள்,
அதை காட்டிலும் மேலான கர்த்தரின்
எதிர்பார்ப்புகள் உங்கள் வாழ்க்கையில்
நிறைவேறி கொண்டிருக்கிறது
என்பதை மறக்காதீர்கள்!!

வாருங்கள் வாழ்த்துவோம், போற்றிடுவோம்
நம் சபையை ...
அஹமதி தமிழ் ஆலயமே மெய்யாய்
உயிரெழுத்தனாய்
உயிரோட்டமும்மானாய் குவைத் தேசத்தில்

அன்பு நிறைந்தோனாய்
ஆறுதல் அளிப்பவனாய்
இரக்கம் உள்ளவனாய்
ஈடு இணையில்லாதவனாய்
உதவி செய்பவனாய்
ஊன் உறக்கம் தருவோனாய்
என்னையென்றும் மறவாதவனாய்
ஏழைகளின் கூக்குரல் கேட்போனாய்
ஐயம் நீக்கி ஆத்தும பசி போஷிக்கிறிவானாய்
ஒருவனாய் எங்களுக்குள்ளே
ஓதும் வழிகாட்டுகிறவனானாய்
ஔஷதமாய் அனைவருக்கும்
ஃ ஆயுத எழுத்தாய் மூன்றில் ஒன்றானாய்

எங்கள் உள்ளத்தில், இல்லத்தில் அங்கமானாய்
உன் நாட்கள் நீடுழிட, பெருகிட என் இயேசு
உள்ளத்தில் வெளிப்பட அருள் புரிந்தாய்.
ஆண்டுகள் 46 அல்ல , இயேசுவின் வருகை
மட்டும் விழித்திருக்கும் விழிகளாய் பூத்து,
காய்த்து, கனி கொடுக்கும் மரங்களாய் விசுவாச
வேர் படர்ந்திட அகமதி குவைத்தில் விளக்காய்
வெளிச்சம் வீசும் என் சபையே, இறை நிறைந்த
"அஹமதி தமிழ் ஆலயமே" ஆண்டுகள்
முடிவதில்லை, உன் ஆளுகை தொடர
ஆர்பரிக்கின்றோம், உம் சேவை பல்லாண்டு
தொடர்ந்திட வாழ்த்துகிறோம்.




என்றும் அன்பும் வாழ்த்துகளுடன்,
ஜெப ஊழிய பொறுப்பாளர்,
**சகோ. மு.எபிநேசர்**

## சர்வ வல்லவர்

"பெரியவர் நமக்குள்ளே ! பெரியவர்
நமக்குள்ளே இயேசு பெரியவர் நமக்குள்ளே . . ."

எங்கள் உயிரினும் மேலான அஹமதி
தமிழ் திருச்சபையே நீர் வாழ்ந்த நாட்கள்
எல்லாம் ஆச்சரியமும் அதிசயமுமானவர்கள்
46ஆம் ஆண்டுக்கு டாடா காட்டி விட்டு 47ஆம்
ஆண்டுக்கு வருகை தரும் எங்கள் உயிர்துடிப்பாம்
அஹமதி தமிழ் திருச்சபையே கடந்த கால
சோதனைகளை துடைத்துவிட்டு சூழ்ந்துள்ள
வேதனைகளை தொலைத்து விட்டு இன்று முதல்
எங்கள் வாழ்வில் ஒளி மிளரட்டும். எங்கள் மன–
தில் சாந்தம் நிலவட்டும் தெளிவு என்ற ஒன்றை
எங்கள் புத்தி அடைய என் இருகில் நீர் இருந்தால்
என்றுமே வாழ்க்கையிலே இன்பம் பெறுவோம்.
முடிவில்லா மகிழ்ச்சியும் செல்வங்கள்
அனைத்தும் குறைவின்றி நீவீர் எங்களுக்கு தந்த
வளமுடன் வாழ்க்கையை செழிக்க வைத்த எங்கள்
அஹமதி திமிழ் திருச்சபையின் 46ஆம் ஆண்டு
நிறைவு விழா காணும் நீர் நலம் வாழ எந்நாளும்
வாழ்த்தும் . . .

அன்பு சகோதரி,
**பிரிஸ்கில்லா செங்குட்டுவன்**




# அஹமதி தமிழ் திருச்சபை

Therefore Love truth and peace. Zac 8:19

# MADRAS PENTECOSTAL ASSEMBLY CHURCH

Manimegalai Nagar, Durugam Road, Kallakurichi -606202

REV. T.V.P. JOHN THOMAS M.DIV., M.A.
Church Pastor
88701 29992
revjohntvp@gmail.com

Date : 3-11-22

Praise the Lord

I will glorify the house of my glory. (Isaiah 60:7)
என் மகிமையின் ஆலயத்தை மகிமைப்படுத்துவேன். (ஏசாயா 60:7)

Congratulations on your 46th church's anniversary. It is no small thing to faithfully worship God for so many years.

I am praising God for this church and the way God has used it to bless me and so many others over the years. May God continue to lead and guide this congregation.

As this church completes another successful year, thank you for all you've done to keep our faith community spiritually healthy and for making this church's ministry truly impactful.

May this anniversary of our church be a sign of its continued good work and blessed ministry. Thank you for all you've done.

With Love
Pr. John Thomas
MPA church
Kallakurichi


*God Bless You!*

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

46வது ஆண்டு விழாவை காணுகின்ற அஹமதி தமிழ் திருசபையோரே, கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

தேவ கிருபையினால் இந்த 46 ஆண்டு காலம், பல விசுவாசிகள், ஊழியர்களை உருவாக்கிய சந்தோஷம் அதற்கு உண்டு. எத்தனையோ தளர்வுகள் வந்தும், அது தளராமல், தளர்ந்த மற்றவர்களை தூக்கிவிட்டு அவர்களை உயாத்தி விட்ட மகிழ்ச்சி அதற்கு உண்டு.

இது போன்ற மகிழ்ச்சிகரமான பல சிறப்புகள் இந்த அஹமதி தமிழ் திருச்சபைக்கு உண்டு. ஆண்டவரின் வருகை வரை அஹமதி தமிழ் திருச்சபையின் இந்த பணி தொடர்வதாக என்று வாழ்த்துகிறேன்.



**பாஸ்டர். ரவிச்சந்திரன்**
**சீயோன் மிஷன் சபை,**
**தஞ்சாவூர்.**

## நீரே என் தஞ்சம்

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவும், பிதாவாகிய தேவனும், பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனுமாகிய இம்மூவரும் ஒன்றினைந்து செயல்பட்டு வருகின்ற எங்கள் அகமதி தமிழ் திருச்சபையின் 46-ஆம் ஆண்டு நிறைவு விழாவிற்காக குடும்பமாக வாழ்த்துதல்களையும், கவிதைகளையும் மண மகிழ்ச்சியோடு எழுதுவதற்கு மறுபடியும் ஒரு நல்ல வாய்ப்பை தந்த என் இயேசுவிற்கே மகிமை உண்டாவதாக.

“உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும் என் பாதைக்கு வெளிச்சமாயிருக்கிறது”
சங்கீ-119:105

கல்லை சிற்பம் செய்து அதற்கு மாலை அணிவித்து பூஜை செய்து காணாத ஒன்றை நம்பி வாழும் மனிதர்கள் மத்தியில் நமக்காக உயிர் தியாகம் செய்து வருத்தப்பட்டு வாடுகின்ற பிள்ளைகளை அன்போடு அகமதி தமிழ் திருச்சபையில் கொண்டு வந்து என் கட்டளைகளை மறவாதே என்று சொல்லி அன்பு காட்டி, அரவணைத்து, பாசம் காட்டி, பரிவோடும்,பொறுமை, பொறுப்பு, நிதானம், கருணை, நேசம், தன்னலம் இல்லாமை, தியாகம் என அனைத்து நல்ல ஒழுக்கங்களையும் கற்று தந்து சோர்ந்து போய் வந்தாலும் சரி, நான் தோற்றுப் போய் வந்தாலும் சரி என்றுமே எனக்கு ஆதரவாக என் வலது பக்கத்தில் துணையாய் இருக்கிறவர். வாழ்க்கையில் எவ்வளவு துயரங்கள் இருந்தால் என்ன? அவரின் உயிருள்ள வார்த்தையை தியானித்தால் ஆறுதலும் மகிழ்ச்சியும்,பெலனும் இந்த உலகத்தையே வெல்லும் அளவிற்கு என்னுள் வலிமை பிறந்து விடும். பிரகாசிப்பதால் உம்முடைய பரிசுத்த வசனம் இந்த உலகில் சுடர் விட்டு இருண்ட எங்கள் பாதையில் எல்லாம் நீர் ஒளியாய் எங்களுக்கு வழி காட்டிதால் தான் நாங்கள் சுத்த ஜோதியாய் பிரகாசிக்கிறோம்.

காசு பணம் இல்லாதவன் என்றுமே ஏழை இல்லை ஆனால் இயேசுவின் இரட்சிப்பையும், அன்பையும் ஏற்றுக்கொள்ளாதவன் பணம் இருந்தும் ஏழைதான்.

தமிழின் உயிர் எழுத்துக்களில் முதலாகி, மெய் எழுத்துக்களில் இடையாகி, உயிர் மெய் எழுத்துக்களில் கடை ஆகி முற்று பெற்று வரும் பெயர் கொண்ட அற்புத பிறவிதான் என் இயேசு.

46-ஆம் ஆண்டு நிறைவு விழா காணும் எங்கள் அகமதி தமிழ் திருச்சபையே உன்னுள் வாசம் செய்யும் முக்கடல் முவேந்தர் என் இயேசு பிரானை குடும்பமாக மண மகிழ்ச்சியோடு பல்லாண்டு காலம் வாழ்க வாழ்க வாழ்க என மனதார வாழ்த்தி மகிழும்

கிறிஸ்துவுக்குள் அன்புடன்,
R.ஸ்டீபன் குடும்பத்தார்

## 46வது ஆண்டுவிழா கவிதைகள்

### 46 ஆண்டுகள்....

<u>தாயாய்</u> எம்மை தேற்றி தினமும் நடத்தினாய்
தாகம் தீர்க்க ஜீவ வசனங்களை போதித்தாய்
தியாகங்கள் பல புரிந்து பாசமாய் தேற்றினாய்
தீமைகளை விலக்கி நல் பாதையில் நடத்தினாய்

<u>தகப்பனாய்</u> தூக்கி சுமந்து தினம் எம்மை தேற்றினாய்
தனிமையின் பாதையில் எம்மை தூக்கி சுமந்தாய்
தேவைகள் யாவையும் ஈந்து எம்மை போஷித்தாய்
தீயவர் அணுகாமல் செட்டை மறைவில் காத்திட்டாய்

<u>சகோதரனாய்</u> உடனிருந்து சோர்வுகள் நீக்கினாய்
சம்பாதிக்க பெலன் தந்து உற்சாகம் ஊட்டினாய்
சோர்வுற்ற நேரமெல்லாம் நேச கரம் நீட்டினாய்
சிறப்போடு நாங்கள் வாழ கரம் பிடித்து தாங்கினாய்

<u>சகோதரியாய்</u> துணை நின்று ஆபத்தில் தாங்கினாய்
நன்மைகள் பலசெய்து பாசக் கரம் நீட்டினாய்
நல்ல பாதை காண்பித்து கரம்பிடித்து நடத்தினாய்
நற்பண்புகள் எம்மில் தோன்ற வேத வசனங்கள் போதித்தாய்

வருகை வரை நீ நிலைத்திருக்க மனதார வாழ்த்துகிறேன்
வருவோரை வாழ வைக்கும் உன்பணி தொடர போற்றுகிறேன்
வியப்போடு பார்க்கிறேன் உந்தன் வளர்ச்சிதனை
வணங்கி கரம் கூப்புகிறேன் இந்த உன் பிறந்த நாளில்!



வாழ்த்துக்களுடன்
சகோ.ஸ்டாலின்

# 46வது ஆண்டு விழா வாழ்த்துகள்

**ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள் (1–பேது–5:6)**

## தேவன் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாய் செய்கிறார்.

**தேவன் எந்த ஒரு ஆசீர்வாதத்தையும் அவர் காலத்திற்கு முன்போ(டிநகழசந ஈளை வஐஅந) அல்லது அவர் காலத்திற்கு பின்போ(யகவநச ஈளை வஐஅந) நமக்கு கொடுப்பது இல்லை. மாறாறக அவர் நேரத்திலேயே(**in His time**) அதாவது சரியான நேரத்திலேயே (**right time**)தருகிறார்.மாத்திரமல்ல அவர் நமக்கு எப்பொழுதும் சிறப்பான ஆசீர்வாதத்தை (**best blessings**)தருகிறார் என்பதே சத்தியம் ஆமென்.**

**இயேசு சரியான நேரம் என்பதற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறார் என்று பாருங்கள் இயேசு செய்த முதல் அற்புதத்தின் போது மரியாள் இயேசுவிடம் வந்து திராட்சைரசம் இல்லை என்று சொன்னதையும் இயேசு அதற்கு என் வேளை இன்னும் வரவில்லை என்று பதில் சொன்னதையும் நாம் அறிவோம். ஒரு திருமணத்தின்போது மணமக்கள் வரவேற்பு(**Reception**) என்பது சில மணிநேரங்கள் மூன்று மணி நேரம் மட்டுமே நடக்கும் நிகழ்ச்சியாகும் மரியாள் இயேசுவிடம் திராட்சைரசம் இல்லை என்று சொன்ன நேரத்திற்கும்(**Not his time**) இயேசு வேலைக்காரரைப் பார்த்து ஜாடிகளில் தண்ணீர் நிரப்புங்கள் என்று சொன்ன நேரத்திற்கும் (**His time**)இடையே இருந்த இடைவெளி நேரம் ஒருவேளை ஒரு சில மணி நேரம் அல்லது ஒரு சில நிமிடங்கள் மாத்திரமே இருந்திருக்கூடும் அப்படியிருக்கும்போது மரியாள் சொன்ன உடனேயே இயேசு அற்புதத்தை செய்யாமல் அல்லது தான் செய்த அறுபுதத்தை ஒரு சில மணிநரம் அல்லது ஒரு சில நிமிடம் முண்ணதாக கூட செய்ய முனையாமல் அல்லது விரும்பாமல் ஏற்ற நேரத்திற்காக காத்திருந்து தம்முடைய நேரத்தில் இயேசு அற்புதம் செய்வதை நாம் பார்க்கிறோம்.இயேசு எப்பபொழுதும் தன் ஆசீர்வாதங்களை நமக்கு ஏற்ற நேரத்திலேயே தருகிறார். தரவிரும்புகிறார் என்பதற்கு இதுவே சான்று ஆமென்.**

**ஏற்ற நேரத்திற்கு முன்பு ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள முயற்சித்த ஒருசிலர் பெறுக்கொண்ட (பெற்றுக்கொள்ள இருந்த) ஆசீர்வாதங்களின் தரத்தை பார்ப்பீர்களேயானால் அவை தேவன் அவர்களுக்கு தர தீர்மானித்திருந்த ஆசீர்வாதங்களைவிட தரம் குறைந்ததாகவே காணப்படுகிறது என்பதை நாம் உணரமுடியும் உதாரணத்திற்கு,**

**1.லாசருவின் சகோதரிகள மார்த்தாளும் மரியாளும் இயேசுவிடம் இயேசுவே நீர் இங்கே இருந்தீரேயானால் எங்கள் சகோதரன் மரித்திருக்கமாட்டான் என்றார்கள். அதாவது இயேசு 4 நாட்களுக்கு முன்பு வந்திருந்தாரேயானால் லாசரு சுகவீனமாய் இருந்தபோதே சுகப்படுத்தியிருப்பார் என்பதே உண்மைதான். அவன் வியாதியிலிருந்து விடுதலையாகி சுகம் பெற்றிருப்பான். வியாதி சுகமாவது என்பது ஒரு சிறிய அற்புதம் மாறாக மரித்தவன் உயிரோடு எழுப்பப்படுவது என்பது மிகப்பெரிய அற்புதம் அவர் நேரத்திற்கு முன்பு (4 நாட்களுக்கு முன்பு) பெற்றுக்கொண்டால் சிறிய அற்புதம். அவர் நேரத்தில் (4 நாட்கள் காத்திருந்து ) பெற்றுக்கொண்டால் மிகப்பெரிய அற்புதம். மாத்திரமல்ல கூடுதல் அற்புதம் லாசரு உயிர்த்தெழுந்ததைக் கண்ட அநேக யூதர்கள் இரட்சிக்கப்பட்டார்கள் என்பது. ஆல்லேலூயா!**
**அவர் நேரத்திற்கு முன்பு பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதம் ஒருவேளை நல்லதாக (**may be a good one**)இருக்கலாம். ஆனால் அவர் நேரத்தில் பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதம் மிகச்சிறப்பான (**the very best**)ஆசீர்வாதமாக இருக்கும் (ஆவிக்குரிய, பூமிக்குரிய பிரகாரமாக) என்பதில் சந்தேகமில்லை ஆமென்.**

**2.யோசேப்பின் விருப்பப்படி இரண்டு வருடத்திற்கு முன்பு தேவன் ஆசீர்வாதம் கொடுத்திருந்திருப்பாரேயானால், அவன் சிறையிலிருந்து மட்டும் விடுதலை ஆகியிருப்பான். மாறாக இரண்டு வருடத்திற்கு பின்பு தேவன் யோசேப்புக்கு தந்த ஆசீர்வாதமோ எகிப்தின் அதிபதிக்கு அடுத்த ஸ்தானத்தில் அவனை உட்கார வைத்தது. யோசேப்புக்கு தேவனுடைய நேரத்திற்கு முன்பு (2 வருடத்திற்கு முன்பு) ஆசீர்வாதம் கிடைத்திருந்தால் அது சுமாரான(**may be fair one**) ஆசீர்வாதமாய்**

இருந்திருக்கும் ஆனால் யோசேப்புக்கு தேவனுடைய நேரத்தில் (2 வருடத்திற்கு பின்பு) கிடைத்த ஆசீர்வாதமோ மிகச்சிறப்பான (the very best)ஆசீர்வாதமாக அமைந்தது. அல்லேலூயா

3.ஆபிரகாமின் விருப்பப்படி அவன் முயற்சியின்படி பதினைந்து வருடத்திற்கு முன்பு (85 வயதில்) ஆபிரகாம் பெற்ற ஆசீர்வாதம் இஸ்மவேல் (துஷ்டன்) மாறாக பதினைந்து வருடத்திற்கு பின்பு(99 வயதில்) தேவன் ஆபிரகாமுக்கு தந்த ஆசீர்வாதமோ வாக்குத்தத்தின் மகன் (15 வருடத்திற்கு முன்பு) தானே தேடி பெற்றுக்கொண்ட ஆசீர்வாதம் ஒரு மோசமான (worst) ஆசீர்வாதமாக அமைந்தது. ஆனால் ஆபிரகாமுக்கு தேவனுடைய சித்தத்தில் (15 வருடத்திற்கு பின்பு) கிடைத்த ஆசீவாதமோ மிகச்சிறப்பான(the very best) ஆசீர்வாதமாக அமைந்தது.ஆமென்.

There is neither shortcuts in God's ways nor shortcuts to God's blessings

நல்ல (Good)ஆசீர்வாதமா! மிகச்சிறப்பான (the very best)ஆசீர்வாதமா!

சுமாரான (fair)ஆசீர்வாதமா! மிகச்சிறப்பான (the very best) ஆசீர்வாதமா!

மோசமான (worst) ஆசீர்வாதமா! மிகச்சிறப்பான(the very best)ஆசீர்வாதமா!

தேவன்தாமே அகமதி தமிழ் திருச்சபையின் மக்கள் உங்கள் ஒவ்வொருவரையும் இந்த மகிழ்ச்சியான நாற்பத்தியாறாவது ( 46வது Anniversary) ஆண்டிலேயும் இதைத்தொடர்ந்து வரவிருக்கும் ஆண்டுகளிலேயும், தம்முடைய வழியில் உங்களை நடத்திச்சென்று அவருடைய நேரத்தில் தம்முடைய சிறப்பான ஆசீர்வாதங்களை தந்து மகிழப்பண்ணுவாராக. ஆமென்



கிறிஸ்துவுக்குள் உங்களை வாழ்த்தும்
**சகோ.பிரேம்குமார் குடும்பத்தினர்**
வேலூர் இந்தியா.

## கோதுமை மணிகள் . . .

கர்த்தருக்குள் பிரியமான அஹமதி தமிழ் திருச்சபை மக்களுக்கு, மிஷனரி ஊழியத்தை குறித்து சில வரிகள் . . .

ஏராளமானவரின் கண்ணீரைத் துடைக்கும், உங்கள் தாராளமான காணிக்கையால் தாங்கும் மிஷனரி ஊழியத்தின் பாதையில் பங்கெடுத்தவர்கள் அநேகர் . . .

நம் திருச்சபையில் 1999 ஆம் ஆண்டு ஒரு சில ஊழியங்களை தாங்க தொடங்கிய மிஷனரி ஊழியம் இன்று நமது திருச்சபையின் ஊக்கமான ஜெபத்தினாலும், அனேகர்களின் உதாரணத்துவமான காணிக்கைகளாலும் தொடர்ந்து, இன்றும் கர்த்தருடைய கிருபையினால் செய்து வருகிறோம்.

12 ஸ்தாபனங்கள், 20 மிஷனரிகள்

கர்த்தரின் ஊழிய பாதையில், எத்தனை கரடு, முரடுகள், வேதனைகள், தொல்லைகள், கஷ்டங்கள், பாரங்கள் இருந்தாலும், ஆண்டவரின் அன்பை கொண்டு செல்லும் நமது மிஷனரியின் வாழ்க்கை ஒரு போராட்டமே.

6 மாதத்திற்க்கு ஒரு முறை, வருடத்தறிக்கு 2 முறை நாம் அனுப்பும் மிகக்குறைந்த காணிக்கை அவர்களின் ஊழிய பாதைகளில் மிகப்பெரிய மாற்றங்களை கொண்டு வருகிறது, என்று அவர்களின் வாய்மொழி கேட்கும்போது அதின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

மிஷனரிகளின் வாழ்க்கையில் அவர்களின் குடும்பத்திலோ, ஊழியத்தின் பாதையிலோ ஏற்படும் இழப்புகள் அநேகமாயிருந்தாலும், கர்த்தருக்காக அவர்கள் செய்யும் இந்த ஊழியத்தினால் பல மடங்கு அசிர்வாதத்தை பெற்றுக் கொள்வதாக கூறும்போது அகமகிழ்ந்து ஆண்டவருக்கு நன்றி கூறுவோம்.

தேவைகளுக்காக மட்டுமே தேவனை தேடும் இவ்வுலகில் தேவனின் இராஜியத்தை கட்ட எழும்பும் இந்த ஆசாரியர்களுக்காக.

நாம் ஜெபத்தினாலும், தாராளமான மனமுவந்த காணிக்கையினாலும் தாங்குவது கர்த்தர் நமக்கு பாராட்டுகின்ற கிருபை . . .

தேவ இராஜ்ஜியத்தை கட்டும் இந்த ஆசாரியர்கள், இடை இடையே சமாரியர்களாகவும் மாறுகின்றனர். இதை எண்ணும்போது நாமும் அவர்களுடன் செல்ல மனம் துணிவு கொள்கின்றது.

தேவனை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, நித்திய ஜீவனுக்கென்று, ஆத்தும ஆதாயத்திற்க்காய் அறுவடை நாட்களில் இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை கையிலேந்தி புறப்பட்டிருக்கும் நமது போர்வீரர்களை எண்ணி தலைவணங்குவோம் தேவனின் சந்நதியில்.

நம்மிடம் கைதொலைபேசி, மின்கடிதம், மற்றும் பல வசதி வாய்ப்புகள் நம் தொடர்புகளுக்கு உண்டான இக்காலகட்டத்தில் ஊழியம் செய்வது சுலபம் என்று நாம் நினைத்தாலும் இப்படிப்பட்ட வசதிகள் ஏதும் இல்லா இடங்களில் இதன் பயன்தான் என்ன? மனிதனை கொன்று தின்னும் மனிதர்கள் மத்தியில் இதன் விலைதான் என்ன? சற்றே நம் சிந்தனைக்கு . . . அநேக மிஷனரிகளை குறித்து நாம் படித்தும், கேட்டும் அறிந்திருக்கிறோம், கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து மிகுந்த பலனை கொடுக்கும் என்ற வேத வசனத்தின் படி (யோ 12:24) ஒவ்வொரு மிஷனரிகள் வாழ்க்கையும் கோதுமை மணிதான். . .

கர்த்தரின் வருகை மிக சமீபம் நாட்கள் வேகமாய் ஓடுகின்றது. கருத்தில்லாமல் வாழ்கிறோம், கர்த்தரிடத்தில் கேட்போம் கண்ணும் கருத்துமாய் வாழ, திறப்பிலே நிற்ப்போம்.

கடல் கடந்து, நாடுகடந்து தேசம் விட்டுதான் கோதுமை மணியாக வேண்டுமென்பதில்லை, நாம் வாழும் குடும்பத்தில் தேசத்தில், பணிபுரியும் இடத்தில், நம்மை காண்பவர்களுக்கு பரிசுத்த தேவனை பிரதிபலிபோமா, அவர் செய்த ஊழியத்தை நினைவிற்கொண்டு, காலம் செல்லாது மவுனமாயிறாதே! எழும்பி பிரகாசி கர்த்தருக்கென்று தீபமாய்!!!

பாதையில்லா இடங்களிலும், பாதைகளின் இருக்கிலும் படிப்பறிவில்லா பாமரர்கள் மத்தியிலும், பாஷை அறியாதவர்களாய் பசியினாலும், பழங்குடி இனத்தவரிடத்திலும், மழை வெய்யில் என்றாலும் தேவ அன்பை சுமந்து செல்லும் நமது மிஷனரிகளுக்காக தலைவணங்குவோம் முழங்கால்களில், உள்ளத்தை கொடுப்போம் தாராளமாய் ஆசீர்வாதம் பெறுவோம் ஏராளமாய் கர்த்தரிடத்திலிருந்து . . .



மிஷனரி ஊழிய பாதையில் நானும்.
சகோ. ஜான்சன்

## அவரின் மகிமை!

கர்த்தருக்கு ஸ்தோத்திரம், கர்த்தருடைய கிருபையால் கடந்த 46 ஆண்டுகள் குவைத் தேசத்தில் அஹமதி தமிழ் திருச்சபை கர்த்தருக்கு மகிமையாக இருப்பதினால் நானும் என் வீட்டார் அனைவரும் கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக என்று சொல்லி தேவனை துதிக்கிறோம். 46 ஆண்டுகளுக்கு முன்னதாக பல அப்போஸ்தலர்களின் முயற்ச்சியில் என் தேவன் அவர்களுக்கு உறுதுணையாய், ஆதரவாய், சகாயராய் ஆலோசனைகள் பல தந்து தேவன் தங்கும் வாசஸ்தலமாக இந்த அஹமதி தமிழ் திருச்சபையை உருவாக்கிய என் தேவனுக்கே மகிமை உண்டாவதாக. லீபனோன் தேசத்தில் கேதுருமரம் எப்படி செழிப்பை தருவது போல அஹமதியில் தமிழ் திருச்சபையாம் எங்கள் திருச்சபையில் அநேகர் வந்து தங்கள் வாழ்க்கையின் எல்லையை பெரியதாக்கியதோடு அல்லாமல் வாழ்வில் செழிப்பை கண்டு மகிழ்ந்து போன உள்ளங்கள் பல உண்டு உம்முடைய அளவற்ற அன்பை நாங்கள் என்னவென்று சொல்வது உம்மகிமையே மகிமை.

46ஆம் ஆண்டு நிறைவு காணும் என் அஹமதி தமிழ் திருச்சபையே நானும் என் குடும்பமும் உமக்கு நன்றி சொல்லி வாழ்த்தி மகிழும்.

அன்பு சகோதரர்,
T.வில்கின்ஸ் தினகரன்
மற்றும் குடும்பத்தினர்
பெங்களூர்.

ஜெபம் ஒரு நாளும் தோற்றுப்போகாது
ஜெபம் ஒரு நாளும் குறி தவறாது
ஜெபம் நினைத்ததை சாதிக்கும்
ஜெபம் தேவஜனத்தின் ஆயுதம்
ஜெபம் சாத்தானை துரத்தி விடும்
ஜெபம் தேசத்தை பாதுகாக்கும்
ஜெபம் சபையை உயிர்பிக்கும்
ஜெபம் கிறிஸ்தவர்களின் நாடி துடிப்பு
ஜெபம் ஜெயத்தை உண்டாக்கும்
ஜெபம் பரிந்து பேசும்
ஜெபம் வல்லமை மிக்கது
ஜெபம் நன்மையை உருவாக்கும்
ஜெபம் காரியங்களை மாற்றும்

ஆண்டுவிழா வாழ்த்துக்களுடன்,
சகோ. பால்ராஜ்.

கிறிஸ்துவுக்குள் அன்பான அஹமதி தமிழ் சபை குடும்ப அங்கத்தினர் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் 46-ம் ஆண்டு விழா நல்வாழ்த்துதல்களை தெரிவித்து கொள்கிறேன். அஹமதி தமிழ் திருச்சபையின் மூலம் அனேகர் தங்கள் வாழ்க்கையில் அனேக ஆசீர்வாதங்களை பெற்று உலகத்தில் பல நாடுகளில் தேவ நாம மகிமைக்காக வாழந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நாட்களில் அவர்களையும் நினைத்து, ஜெபித்து தேவனுக்கு நன்றி செலுத்துவோம். அஹமதி தமிழ் திருச்சபை சின்ன மரமாக வளாந்து ஒரு பெரிய மரமாக அனேகருக்கு ஆசீர்வாதமாக திகழ்கின்றது.

“கர்த்தரை தங்களுக்கு தெய்வமாக கொண்ட ஜாதியும், அவர் தமக்கு சுதந்திரமாகத் தெரிந்து கொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது” சங் 33:12.

நாம் பாக்கியம் உள்ளவர்களாக இருக்க வேண்டுமானால்,

### 1.கர்த்தரை எப்பொழுதும் நம்முன்வைத்திருக்க வேண்டும்:

“கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன். அவர் என் வலது பாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை” சங் 16:8.

### 2.கர்த்தரை நோக்கி சத்தமிட்டு கூப்பிட வேண்டும்:

“நான் கர்த்தரை நோக்கி சத்தமிட்டு கூப்பிட்டேன் அவர் தமது பரிசுத்த பர்வதத்திலிருந்து எனக்கு செவிகொடுத்தார்” சங் 3:4.

### 3.கர்த்தரை நோக்கி கர்த்திருக்க வேண்டும்:

“கர்த்தரை நோக்கி அமர்ந்து, அவருக்குக் காத்திரு,கர்த்தருக்குக் காத்திருந்து அவருடைய வழியை கைக்கொள். அப்பொழுது நீ பூமியைச் சுதந்தரித்துக் கொள்வதற்க்கு அவர் உன்னை உயர்த்துவார்.” சங் 37:7.

### 4.கர்த்தர் மேல் நம்பிக்கையுள்ளவர்களாய் இருக்க வேண்டும்:

“என் தேவனே, உம்மை நம்பியிருக்கிறேன், நான் வெட்கப்பட்டு போகாதபடி செய்யும், என் சத்துருக்கள் என்னை மேற்கொண்டு மகிழவிடாதிரும்.” சங் 25:2.
கர்த்தரை தெய்வமாக கொண்ட ஜனங்கள் கர்த்தர்மேல் நம்பிக்கையுள்ளவர்களாய் அருந்தால் வெட்கப்பட்டுப் போகாத படி கர்த்தர் நடத்துகிறார்.
இந்த புதிய ஆண்டிலும் கர்த்தர் மேல் சார்ந்து கொள்ள குடும்பமாய் வாழ்த்துகிறோம்.



கிறிஸ்துவக்குள் அன்புள்ள,
சகோ. B. அருள் சாமுவேல்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான அஹமதி குவைத் தழிழ் திருச்சபை பெறுப்பாளர்கள், விசுவாச பெருமக்கள், நண்பர்கள் ஒவ்வொருவரையும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஈடு இனையற்ற நாமத்தில் வாழ்த்துகிறேன்.

லூக்கா எழுதின சுவிசேஷம் 4:18 வசனத்தின் படி உங்கள் ஒவ்வொருவரையும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வலலமையாக பயன் படுத்துவாராக. திருப்பணி பயனத்தின் 46 ஆண்டுகள் நிறைவை விழாவாக கொண்டாட கர்த்தர் தந்த கிருபைக்காக அவரை துதிக்கிறேன். எல்லையை கடந்து, சிந்தையில் தொடர்ந்து, விந்தையில் ஒளிர்ந்து, வளர்ச்சியில் மகிழ்ந்து, ஆண்டவரை புகழ்ந்து, வாழ்த்துரை வனைந்து இறை ஆசியின் முன் சுவைகளான அன்பு, அமைதி, அரம் மலரட்டும் என கூறி இரட்சிப்பு, வல்லமை, ஆவியின் வரம் ஆகிய தேவ ஆசிர்வாதங்களை பெற்று அரபு நாட்டிலே மணல் நிறைந்த மறு பூமியில் மலர்ந்து மனம் வீசுகின்ற மலராய் இறை நற்செய்தியை பிரகாசிப்பிக்கிற திருச்சபையாய் வளர்ந்து செழித்தோங்க ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அருள் செய்வாராக. அவருடைய வல்லமையை நீங்கள் பெற்று மகிமையான அனுபவத்தோடு செழித்தோங்கிட என்னுடைய வாழ்த்துக்கள். அவனுடைய தேவனாகிய கர்த்தர் அவனுடனே இருந்து அவனை மிகவும் பெரியவனாக்கினார். 2 நாளாகமம் 1:1-ன் படி ஆண்டவராகிய தெய்வம் உங்களை ஆசீர்வதிப்பாராக. நீங்கள் வாழ, வளர உதவி செய்த ஆண்டவராகிய தெய்வத்தை ஸ்தேதரிக்கிறேன். இந்த வாழ்த்துரை மூலமாக ஆண்டவராகிய தெய்வம் உங்களை அதிகமாய் ஆசீர்வதிப்பாராக என்று செல்லி என்னுடைய வாழ்த்துரையை நிறைவு செய்கிறேன். ஆண்டவர் உங்களையும், உங்கள் குடும்பங்களையும், திருச்சபையையும் மிக பெரிய ஆசீர்வாத்தின் பாதையிலே வழிநடத்துவார் என்பதிலே எந்த சந்தேகமும் இல்லை. ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.



தேவ ஊழியர்,
சகோ.ஆல்வின் ஜெபா

# Sweet Memories

## கடந்த ஆண்டு நடந்த முக்கிய நிகழ்வுகளில் சில காட்சிகள்























